பக்கங்கள்: ஆறு

அன்பளிப்பு

Registered as a Newspaper

File

# உதயன்

விலை ரூபா 6·00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 சித்திரை 03 திங்கட்கிழமை (15-04-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 139

# கொழும்புத் துறைமுகத்துக்குள் ஊடுருவி கரும்புலிகள் தாக்குதல் நடத்தியது எப்படி?

சாவகச்சேரி, டிச. 15

ஸ்ரீலங்காவின் அதிகூடிய பாதுகாப்புக் கொண்ட கொழும்புத் துறைமுகத்துக்குள் ஊடுருவி கரும்புலிகள் தாக்குதல் நடத்தியது எப்படி என்பது பற்றிய விவரத்தை ''புலிகளின் குரல்'' வானொலி வெளியிட்டுள்ளது.

கரும்புலிகள் ஒன்பது பேரும் தமக்கான பணியை திட்டமிட்டபடி வெற்றிகரமாக நிறைவேற்றி ஆறு கப்பல்களையும் தகர்த்தனர் என்றும் ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

சம்பவதினம் இரவு 9.30 மணிக்கு கொழும்புத் துறைமுகத்திலிருந்து சுமார் இரண்டு கடல் மைல் தொலைவில் உள்ள முகத்துவாரத்திலிருந்து ஆறு நீரடி நீச்சல் பிரிவு கடற் கரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் ரோந்து கிழக்கில் குறைப்பு!

## புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்ததால்

சாவகச்சேரி, ஏப்ரல் 15

**கிழக்கில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் தீவிரமடைந்திருப்பதை அடுத்து அங்கு தமது ரோந்து நடவடிக்கைகளை படையினர் பெருமளவுக்குக் குறைத்து விட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்காக, கிழக்கிலங்கையில் பல படை முகாம்களை மூடி அங்கிருந்த துருப்புகளை வடக்கிற்கு ஸ்ரீலங்கா அரசு அனுப்பியதை அடுத்து —

கிழக்கின் பெரும்பகுதி விடுதலைப் புலிகளின் வசம் வீழ்ந்தது தெரிந்ததே.

கிழக்கில் புலிகளின் பலம் அதிகரித்ததை அடுத்து —

படையினரிடம் எஞ்சியுள்ள கிழக்குப் பிரதேசத்திலும் புலிகள் தமது அதிரடித்தாக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நீர் விநியோகம் தடைப்பட்டது

கொழும்பு, ஏப். 15

கொழும்பின் பெரும் பாகப் பிரதேசத்தில் குடி தண்ணீர் விநியோகம் தடைப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அம்பத்தளை நீர் சுத்திகரிக்கும் ஆலைப் பகுதியில் ஏற்பட்ட மின்விநியோகத் தடையால் நீரை பாய்ச்ச முடியாது போனதாகவும் —

மின் விநியோகம் கிடைத்தால் மட்டுமே வழமையான நீர் விநியோகம் நடைபெறும் என்றும் — தெரிவிககப்பட்டது.

எப்போது நீர் விநியோகம் வழமைக்குத் திரும்பும் என அறிவிக்கப்படவில்லை.

(உ-3)

# 9 கடற்கரும்புலிகள் நினைவாக மூன்று நாள்களுக்கு ஊர்திப்பவனி

சாவகச்சேரி, ஏப். 15

கொழும்புத் துறைமுகத்துக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தி வீரகாவியம்படைத்த 9 கடற்கரும்புலிகளின் உருவப்படங்கள் தாங்கிய-கப்பல் வடிவிலான - ஊர்தி இன்று முதல் மூன்று நாள்கள் தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் மக்களின் வீர அஞ்சலிக்காக பவனியாகச் செல்லும்.

இன்று பிற்பகல் ஒருமணியளவில் சாவகச்சேரி சந்தியில் நடைபெறும் வீரவணக்கக் கூட்டத்தைத் தொடர்ந்து ஊர்திபவனி ஆரம்பமாகும்.

ஊர்தி சாவகச்சேரி-யாழ். வீதி ஊடாக நுணாவில் சந்தியை அடைந்து, நுணாவில்-மட்டுவில் வீதி ஊடாக கனகம்புளியடிச் சந்தியை சென்றடையும்.

பின் கனகம்புளியடி - கொடிகாம் வீதி ஊடாக வேம்பிராய் சந்தி, வேம்பிராய் - வரணி ஊடாக வரணி சந்தை ஆகியவைற்றையும் வரணி - கொடிகாமம் வீதி ஊடாக கொடிகாமம் சந்தி, கொடிகாமம் - பளை வீதி ஊடாக புதுக்காட்டுச் சந்தி ஆகியவற்றையும் சென்றடையும். பின்னர் புதுக்காட்டுச் சந்தி - மருதங்கேனி வீதி ஊடாக தாளையடியை சென்றடைந்து இரவு தாளையடியயில் ஊர்தி தரித்து நிற்கும்.

நாளை

நாளை காலை 9.30 மணியளவில் தாளையடிச் சந்தியில் இடம்பெறும் வீரவணக்கக் கூட்டத்தைத் தொடர்ந்து கடற்கரை வீதி ஊடாக வேம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மிக மோசமான தோல்வி காங்கிரஸுக்கு நிச்சயம்

## வெரித்தாஸ் கணிப்பு இது

மணிலா, ஏப். 15

எதிர்வரும் இந்திய பொதுத் தேர்தலில் இதுவரை சந்தித்திராத மோசமான தோல்வியை காங்கிரஸ் சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டுள்ளது.

நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் கட்சி பொதுத் தேர்தலுக்குப் பின் உடைந்து சிதறும் வாய்ப்பு அதிகம் என அரசியல் விற்பன்னர்கள் கணித்துள்ளனர்.

சுதந்திரத்துக்குப் பின் இது வரையான 49 ஆண்டுகளில் சுமார் 45 ஆண்டுகள் இந்தியாவை ஆண்டு வந்திருக்கும் காங்கிரஸ் கட்சி தனது பாரம்பரிய ஓட்டு வங்கிகளாக இருந்த தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள், முஸ்லீம்கள் மற்றும் உயர் ஜாதியினர் அக்கட்சியை விட்டு அகன்று போய் விட்டதை கட்சிப் பேச்சாளர் வி. என். காட்கில் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இந்தியாவில் மொத்தம் உள்ள 25 மாநிலங்களில் ஏழு மாநிலங்களில்தான் காங்கிரஸ் இப்போது ஆட்சியில் இருக்கின்றது.

நாட்டின் மிகப்பெரிய மாநி

(6ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய தேர்தலின் பின் தொங்கு நாடாளுமன்றம்?

கொழும்பு, ஏப். 15

இந்தியா உறுதியற்ற அரசியல் சகாப்தத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதாக அரசியல் அவதானிகளை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

பொதுத்தேர்தலுக்கு இன்னும் இரு வாரங்களே இருக்கின்ற நிலையில், ஆளும் காங்கிரஸ் கட்சி படு தோல்வியடையக் கூடும் என்ற அறிகுறிகள் தென்படுகின்றன.

தேர்தலில் எந்தக் கட்சி வெற்றியீட்டினாலும் உறுதியான அரசாங்கம் ஒன்றை அதனால் அமைக்க முடியாதிருக்கும்; தொங்கு நாடாளுமன்றமே அமையும் என அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

தேசிய அரசியலிலும், காங்கிரஸ் கட்சியிலும் அரை நூற்றாண்டு காலம் ஆதிக்கம் செலுத்திய நேரு, காந்தி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு

(6ஆம் பக்கம் பார்க்க்)

## ரஜனி களத்தில் குதித்தால்

# தி.மு.க.- மூப்பனார் அணி 200 இடங்களில் வெல்லும்

★ தமிழகத் தேர்தலில் தி. மு. க. — மூப்பனாரின் தமிழ் நாடு மாநில காங்கிரஸ் கூட்டணி எதிர்வரும் தேர்தலில் 169 ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடிக்கும்.

★ இந்தக் கூட்டணிக்கு ஆதரவாக நடிகர் ரஜனி காந்த் பிரசாரம் செய்தால் இக் கூட்டணி 234 சட்டசபைத் தொகுதிகளில் இருநூறு தொகுதிகளில் வெற்றி பெறும்.

பிரதமர் நரசிம்மராவின் பணிப்பின் பேரில் மத்திய அரசின் இரகசியப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தமிழ் நாட்டில் புள்ளி விவரங்கள், தகவல்களைத் திரட்டி அதனடிப்படையில் பிரதமர் ராவுக்குச் சமர்ப்பித்துள்ள புலனாய்வு அறிக்கையில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டுள்ளது.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான

# அரசமைப்புத் திருத்த சட்டவரைவு

# ஓகஸ்ட் மாதத்துக்குள் தயாராகிவிடும்

## தெரிவுக்குழு துரிதமாகச் செயற்படுமாம்

கொழும்பு, ஏப். 15

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அரசமைப்பு சீர்திருத்த நாடாளுமன்ற தெரிவுக்குழு அதன் பணிகளை துரிதப்படுத்தி எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் உத்தேச அரசமைப்பு நகல் சட்டத்தை தயாரித்து முடிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டியிருக்கின்றது.

புத்தாண்டின் பின்னர் மே மாதம் முதல் வாரத்தில் நாடாளுமன்றம் கூடும்போது அரசமைப்பு தெரிவுக் குழுவும் தொடர்ந்து கூடி உத்தேச அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை தீவிரமாக ஆராயவுள்ளதாக தெரிவுக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

மே மாதம் 7, 8, 9, 10ஆம் திகதிகளில் தெரிவுக்குழு காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கூடி ஆராயவுள்ளது.

இக் குழு முன் 17 அரசியல் கட்சிகள் சாட்சியமளிக்கவிருக்கின்றன.

ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் சாட்சியமளிக்க தலா ஒரு மணிநேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தெரிவுக்குழுவுக்கு எழுத்து மூலம் யோசனைகளைச் சமர்பித்த அரசியல் கட்சிகளே தெரிவுக்குழு முன் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தாத அரசியல் கட்சிகளும் அடங்கியுள்ளன.

ஜனாதிபதி முறை, தேர்தல் முறை, அடிப்படை மனித உரிமைகள், நிதி, நீதிச் சேவை ஆகிய துறைகள் பற்றி ஆராய தனித்தனி குழுக்கள் நியமிக்கப்படவிருக்கின்றன.

சர்ச்சைக்குரிய விடயங்களான அதிகாரப் பரவலாக்கல் அலகு, காணி போன்ற விடயங்கள் குறித்து அரசியல் கட்சிகளின் வாய் மூலக் கருத்துக்களைப் பெற்றதும் தெரிவுக்குழு அது குறித்து ஆராயும் என்றும் —

அநேகமாக ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் நகல் திட்டத்தை தயாரித்து முடிப்பதற்காக தெரிவுக்குழு தனது பணியை துரிதப்படுத்தும் என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டதாக அப்பத்திரிகை குறிப்பிட்டது. (உ-3)

## 6 மாதங்களாக சம்பளம் இல்லை

கோயில்குடியிருப்பு, ஏப். 15

யாழ். மாவட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை ஆறு மாதங்களாக சம்பளக் கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை.

தமது ஆறு மாத கால சம்பளக் கொடுப்பனவைப் பெறப் பல தடவைகள் கொழும்புத் தலைமையகத்துடன் கடிதம் மூலம் தொடர்பு கொண்டும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை என்று இத்திணைக்கள ஊழியர்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர். (அ-30)

## "ஹபரண" இன்று வரும்

''ஹபரண'' கப்பல் திருகோணமலையில் இருந்து இன்று பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ - 173)

## படகு கவிழ்ந்தது

தென்மராட்சி, ஏப். 15

ஆலங்கேணியிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை பயணிகளுடன் கிளாலி நோக்கி வந்த படகுகளில் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

படகு கவிழ்ந்ததால் கடலில் தத்தளித்த பயணிகளை அந்த வழியே வந்த ஏனைய படகுகள் காப்பாற்றின. உயிர்ச் சேதம் எதுவும் உண்டாகவில்லை என அறியப்படுகிறது.

ஆனால் பயணிகளின் பொதிகள் உட்பட பல பொருள்கள் கடலில் மூழ்கி விட்டன. புதுவருடத்தையொட்டி வன்னிப் பகுதியில் இருந்து வந்தவர்கள் கொண்டு வந்த உடு புடைவைகளும் கடலில் வீழ்ந்து விட்டதாக அறிய வந்தது. (அ-117)

# இம்ரானின் ஆஸ்பத்திரியில் பெரும் குண்டு வெடிப்பு!

## 4 பேர் பலி; 31 பேர் படுகாயம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனான இம்ரான் கான் தனது தாயாரின் ஞாபகார்த்தமாக லாகூர் நகரில் கட்டியிருந்த பிரமாண்டமான புற்றுநோய் மருத்துவமனையில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததில் 4 பேர் கொல்லப்பட்டனர்; 31 பேர் படுகாயமடைந்தனர்; மருத்துவமனைக் கட்டடத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

அரசியல் கட்சி ஒன்றைத் தொடங்கப்போவதாக அவர் அறிவித்ததற்கு மறுநாள் இக் குண்டு வெடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் மிகச் செல்வாக்கும் மக்கள் ஆதரவும் பெற்ற பிரமுகரான இம்ரான் கான் தனிக்கட்சி ஒன்றைத் தொடங்கினால் அது பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் ஆளும் கட்சிக்கு பெரும் தலையிடி தரக்கூடிய கட்சியாக இருக்கும் என்று அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

அரசியலில் தனக்குஎதிரான பெரும் சக்தியாக இம்ரான் எழுவார் என்ற அச்சம் பெனாஸிர் பூட்டோவுக்கு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

தனது ஆஸ்பத்திரியை முடக்கி அழிக்க பெனாஸிர் பூட்டோ அரசு முயன்று வருகின்றது எனக் கடந்த மாதம் இம்ரான் கான் குற்றம் சுமத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-3-7)

# இந்தியத் தேர்தலால் சோதிடர்களுக்கு யோகம்

புதுடில்லி, ஏப். 15

இந்தியப் பொதுத் தேர்தலினால் இந்திய சோதிடர்களுக்கு யோகம் அடித்திருக்கின்றது.

தேர்தலில் குதித்திருக்கும் வேட்பாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் தமது பக்கத்தின்வெற்றி குறித்து சோதிடக் கணிப்புகளைப் பெற்றுக் கொள்வதில் மும்முரமாக இருப்பதால் சோதிடர்களின் வருமானம் திடீரென பல மடங்கு அதிகரித்திருக்கின்றது.

தத்தமது கிரகநிலைப்படி நாடாளுமன்ற ஆசனம், மந்திரிப் பதவி ஆகியன தமக்குக் கிடைக்குமா என்பதை அறிவதில் முக்கிய அரசியல்வாதிகள் அக்கறை காட்டி வருவதாக டில்லியிலுள்ள முன்னணி சோதிடரான ராஜ் பால்தேவ் சுவாமி தெரிவித்துள்ளார்.

(உ-10)


## தேடுகின்றார்

இணுவில் மேற்கு ச. சத்தியசீலன் என்பவரை கா. சிவபாலன் என்பவர் தேடுகின்றார்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
கனகபுரம், 2 ஆம் பண்ணை, காணி இல. 11,
கிளிநொச்சி (40500)

## புதிய உயர் கல்லூரி

(புலோலி கல்வி நிலையம், உபயகதிர்காமம், புலோலி.)

★ A/L 96 DAY CLASS
A/L 96

ஆரம்பம் 17-04-1996 9-00 மணி

★ பேராதனை பல்கலைக்கழகத்திற்குரிய G. A. Q. பதிவிற்கான விண்ணப்பப் படிவங்களை 17 ஆம் திகதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(41386)

## போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்பு

★ சமய பாட ஆசிரியர் தெரிவுப் பரீட்சை
1. நுண் அறிவு, 2. பொது அறிவு

★ கிராமசேவை உத்தியோகத்தர் தெரிவுப் பரீட்சை
1. நுண்ணறிவு, மொழி அறிவு

வழி காட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்

தென்மராட்சியில் —
22- 04- 96 (2. மணி):- புதியஉயர் கல்லூரி (அரசினர் வைத்தியசாலை முன்பாக) விநாசிதம்பி லேன், சாவகச்சேரி.

வடமராட்சியில் —
03- 05- 96 ( 10 மணி ):- புதிய உயர் கல்லூரி (புலோலி கல்வி நிலையம்), உபய கதிர்காமம், புலோலி.

ஆசிரியர்
அ. குமாரவேல்

நிர்வாகி
S. அருள்நங்கை

(41387)

## O/L YEAR 10, 9

வகுப்புக்கள் ஆரம்பம்
16 — 04 — 96
3 மணி

புதிய உயர் கல்லூரி

(அரசினர் வைத்தியசாலை முன்பாக)
வினாசித்தம்பி லேன்,
சாவகச்சேரி.

(41384)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாக்கியம் கிருஷ்ணபிள்ளை

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் கிருஷ்ணபிள்ளை 11-04-96 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12 - 04 - 1996 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. ரஞ்சன்

கச்சாய் வீதி, கொடிகாமம் மத்தி,
கொடிகாமம். (41532)

## சுவாமிநாதர் சுப்பிரமணியம் J. P.

(முன்னாள் பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர், வலி. கிழக்கு)

கோப்பாயைச் சேர்ந்த சுவாமிநாதர் சுப்பிரமணியம் 14 - 04 – 1996 நேற்று சிவபதம் அடைந்துவிட்டார். இவர் திருமதி கனகம்மாவின் அன்புக் கணவரும், குமாரசாமி (கொழும்பு), மகேஸ்வரி, யோகீஸ்வரி (பதிவாளர், பிறப்பு, இறப்பு, விவாகம் — கோப்பாய்), கந்தசாமி, நாகேஸ்வரி (ஆசிரியை, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), குருநாதசாமி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லிங்ககுமாரி (கொழும்பு), ஸ்ரீவரதராஜன் (இளைப்பாறிய மருந்தாளர்), சிவசோதி, சிவநாதன் (கிராம சேவை அலுவலர்), எமிலிகா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் (15- 04- 1996) இன்று பகல் 11. 30 மணியளவில் அன்னாரின் தற்காலிய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் தெற்கு நேரிய தாவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி. யோகீஸ்வரி ஸ்ரீவரதராஜன் (மகள்)

முகவரி:
மே/பா. திரு. க. வெற்றிவேலு
'ரட்ணவாசம்',
இலுப்பையடி வீதி,
மட்டுவில் தெற்கு. (41533)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளியன்று கொழும்புத்துறைமுகத்தில்

# மூன்று கடற்படைக் கப்பல்களும்

# 3 வர்த்தகக் கப்பல்களும் மூழ்கடிப்பு

## கடற் கரும்புலிகள் வீரசாதனை

சாவகச்சேரி, ஏப்ரல், 15

**கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 1·30 மணியளவில் அதிக பாதுகாப்பு மிக்க கொழும்புத் துறைமுகத்துக்குள் ஊடுருவி கடற்கரும்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் மூன்று கடற்படைக் கப்பல்களும் மூன்று சரக்குக் கப்பல்களுமாக ஆறு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.**

திரும்பவும் அதிகாலை 5.45 மணியளவில் துறைமுகப் பகுதிக்குள் அதிவேகப் படகில் ஊடுருவி கடற்கரும்புலிகள் நடத்திய ஆர். பி. ஜி. தாக்குதலின் போது துறைமுகக் கட்டடத்தின் ஒரு தொகுதி பலத்த சேதத்திற்குள்ளானதுடன் அப்பகுதியில் தரித்து நின்ற சில கப்பல்களும் சேதமுற்றதாக அறிவிக்கப்பட்டது.

கடற்புலிகளின் கடற்கரும்புலிகள், நிரோஜன் நீரடி நீச்சல் பிரிவின் கடற்கரும்புலிகள், அங்கயற்கண்ணி நீரடி நீச்சல் பிரிவின் கடற்கரும்புலிகள் என மூன்று அணிகள் இணைந்து இத்தாக்குதலை நடத்தியிருக்கின்றன.

ஆனால்—

வெள்ளி அதிகாலை 1. 30 மணிக்கு துறைமுகத்துக்குள் நடந்த தாக்குதலை அடியோடு மறைத்துவிட்ட ஸ்ரீலங்கா அரசு அதிகாலை 5.45 மணியளவில் நடந்த தாக்குதல் பற்றி மட்டுமே தகவல் வெளியிட்டது.

தாக்குதல் நடைபெற்ற தினம் பிற்பகல் வரை துறைமுகத்துக்குள் செய்தியாளர்களை அனுமதிக்க அரசு மறுத்தமை தாக்குதல் பற்றிய செய்தியை மூடிமறைப்பதற்கு எடுத்த முயற்சியே என்று கருதப்படுகிறது.

பலத்த பாதுகாப்புக்கும் மத்தியில் கொழும்புத் துறைமுகத்துக்குள் நள்ளிரவு வேளை நீருக்கு அடியில் கடற்கரும்புலிகளின் நீரடி நீச்சல் பிரிவினர் நீந்திச் சென்று கப்பல்களின் அடியில் குண்டுகளைப் பொருத்தி அவற்றை வெடிக்க வைத்தனர்.

(உ)

## இரு பெண் கடற்கரும்புலிகள் உட்பட ஒன்பது கடற்கரும்புலிகள் வீரச்சாவு

சாவகச்சேரி, ஏப். 15

கொழும்பு துறைமுகத்துக்குள் கடந்த வெள்ளிக்கிழமை நுழைந்து வெற்றிகரத்தாக்குதல் நடத்தியதில் இரு பெண் கடற்கரும்புலிகள் உட்பட ஒன்பது கடற்கரும் புலிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரகாவியமான கரும் புலிகளின் விவரம் வருமாறு :-

- ★ லெட்டினன்ட் கேணல் ரதீஸ் (வல்வெட்டித்துறை)
- ★ மேஜர் ரதன் (திருகோணமலை)
- ★ மேஜர் பொய்யாமொழி (திருகோணமலை)
- ★ மேஜர் ஜனார்த்தனன் (காங்கேசன் துறை)
- ★ மேஜர் ரவாஸ் (சக்கோட்டை)
- ★ மேஜர் பரன் (பருத்தித்துறை)
- ★ கப்டன் சுபாஸ் (திருகோணமலை)
- ★ கப்டன் மதனி (வெற்றிலைக்கேணி)
- ★ கப்டன் விக்கி (வெற்றிலைக்கேணி)

## 9 கடற் கரும்புலிகளின் நினைவாக இன்று முதல் எழுச்சி நிகழ்வுகள்

### மூன்று நாள்களுக்கு நடக்கும்

சாவகச்சேரி, ஏப். 15

கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்பு வியூகங்களை ஊடறுத்து தாக்குதல் நடத்தி வீரகாவியமான 9 கடற் கரும்புலிகளின் நினைவாக எழுச்சி நிகழ்வுகள் இன்று முதல் மூன்று தினங்கள் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றன.

மாவீரர்களின் படங்கள் வீடுகள் மற்றும் பொது இடங்களில் வைத்து மலர் மாலை அணிவித்தும், மஞ்சள், சிவப்பு, நீலக் கொடிகளால் அலங்கரித்தும், எழுச்சி ஊர்தி ஊர்வலம் நடத்தியும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆங்காங்கே பொது இடங்களில் வாழை, தோரணங்கள் கட்டியும், ஒலிபெருக்கி மூலம் கரும்புலிகளின் வரலாற்றைச் சித்திரிக்கும் பாடல்கள் ஒலி பரப்பியும் உணர்வு பூர்வமாக கடற்கரும்புலிகளுக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டதாக எமது பிரதேச செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(உ-3-80)

## கடற்படை, விமானப்படை, பொலிஸ் துறைமுகத்தில் கூட்டாக ரோந்து!

கொழும்பு, ஏப். 15

கடந்த வெள்ளிக்கிழமை விடுதலைப்புலிகள் கொழும்பு துறைமுகத்தை தாக்கியதையடுத்து —

கொழும்புத் துறைமுக பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸார் இணைந்து கூட்டு ரோந்து நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளனர்.

துறைமுகத்துக்கு உள்ளேயும், வெளியேயும் நங்கூரமிட்டுள்ள கப்பல்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படும் என்று துறைமுக அதிகார சபை அக்கப்பல்களின் உரிமையாளர்களுக்கு உறுதியளித்துள்ளது.

பாதுகாப்பு வழிமுறைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஆறுபேர் கொண்ட குழு ஒன்றை கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் நியமித்துள்ளார். (உ-3)

## புதுவருடக் கொண்டாட்டம் தெற்கில் சோபையிழப்பு

கொழும்பு, ஏப். 15

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு துறைமுகத்தை விடுதலைப் புலிகள் தாக்கியதையடுத்து--

தெற்கில் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் சோபையிழந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆலயங்களில் நடந்த பிரார்த்தனைகளுடன் புத்தாண்டு கொண்டாட்டங்கள் சுருக்கப்பட்டன.

வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது. ஆனால் பாதுகாப்பு படையினர் மட்டும் ஆயுதங்கள் சகிதம் எங்கும் காணப்பட்டனர்.

புத்தாண்டு கொண்டாட்டங்களின் உச்சக்கட்டமாக இடம்பெறும் கோஷ்டி மோதல்கள் கூட இம்முறை தெற்கில் நடைபெறவில்லை.

வெடி கொளுத்த விதிக்கப்பட்ட தடையால் வெடிகளும் வெடிக்கவில்லை.

புத்தாண்டின் பின் எந்த வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என்றும்—

வெடி கொளுத்துவதால் ஏற்படும் தீக்காயங்கள் உட்பட புதுவருடக் கொண்டாட்டங்களின்போது ஏற்படக் கூடிய காயங்களுடன் எவரும் கொழும்பு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படவில்லை என்றும்—

கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## இராணுவ நடவடிக்கைகளுக்கு பெரிய படையணிகள் இனி பயன்படுத்தப்படமாட்டா!

இனிமேல் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கைகளின் போது பெரிய படையணிகள் ஈடுபடுத்தப்படமாட்டா என மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக 'திவயின'' சிங்கள நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

சிறிய எண்ணிக்கையான படையினரைப் பயன்படுத்தி பெரிய அளவில் புலிகளை அழிக்கும் புதிய திட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளாராம்.

வடக்கில் வலிகாமம் பிரதேசத்தில் அண்மையில் எட்டு நாள்களாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின்போது அப்பகுதிகளில் மறைந்திருந்த பல விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதையடுத்து புதிய இராணுவ தந்திரம் ஒன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டது.

## ஜனாதிபதியைச் சந்திக்க தமிழர் கூட்டணி முயற்சி

கொழும்பு, ஏப். 15

அரசு சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டத்தில் உள்ள விடயங்கள் மற்றும் வடக்கு - கிழக்கு இணைப்பு போன்றவை குறித்து பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியிடம் கோரியிருக்கின்றது.

சில முக்கிய விடயங்கள் குறித்து தெரிவுக் குழுவில் விவாதிக்கப்படாதது குறித்து இச்சந்திப்பின் போது தாங்கள் பேசவிருப்பதாக கூட்டணியின் உபதலைவர் ஜே. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

[உ-10]

## கனடாவிலிருந்து இன்று உயர்மட்டக்குழு வருகை

வடக்கு - கிழக்கு நிலைமைகளை நேரடியாக ஆராயவும் —

அரசின் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்ட பின் உருவாகியுள்ள சூழ்நிலையை அறியவும் —

கனேடிய அரசின் உயர்மட்டக்குழு ஒன்று இன்று கொழும்பு வருகிறது.

கனேடிய அரசின் ஆசிய-பசுபிக் விவகாரங்களுக்கான அமைச்சர் ஜோன் எட்வேர்ட், குடிவரவு, குடியகல்வு பிரதியமைச்சர் நொசில் ஹட், அமைச்சின் ஆலோசகர் குவாட் பொஸ்தா ஆகியோர் அடங்கிய குழுவே இலங்கை வருகிறது.

கொழும்பில் தங்கியிருக்கும் நாள்களில் அவர்கள் பல தரப்பட்டவர்களுடனும் பேச்சுக்கள் நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகிஸ்றது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பர

### விற்பனைக்கு

கல்வி நிறுவனங்களுக்கு பாவிக்கக்கூடிய வாங்கு, மேசை, தகரம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. செல்வராசா, ஆங்கிலக் கல்வி நிலையம், வேம்பிராய் சந்தி. (41522)

### சைக்கிள் விற்பனைக்கு

புதிய அட்லஸ் ஸ்போர்ட்ஸ் சைக்கிள் கியர், மீற்றர் உடன் விற்பனைக்கு. தொடர்பு: மகேந்திரன் "சிவனகம்", தென்னிந்திய திருச்சபை அருகில், கண்டி வீதி, நுணாவில் மேற்கு. பார்வையிடுதல்- திங்கள் முதல் புதன்கிழமை வரை. (40439)

### புத்தாண்டுப் பலன்கள்

1996 — 97 தாது வருஷ கர்ம பலன்கள், கைவிசேஷம், புதிய சனி மாற்ற பலாபலன்கள் (சத்யா), பாடசாலைக் கொப்பிகள், தினசரிகளும் விற்பனையாகின்றன. மணியம் ஸ்ரோர்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி. (41514)

### வாடகைக்கு

பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம். பீங்கான், ரம்லர், தண்ணீர் ரம்லர், ஐஸ்கிறீம் கப்ஸ். பிளாஸ்ரிக் பாய்கள், சில்வர் றே, கறி வாளிகள், கறி டிஸ்கள், பந்திப்பாய், கிடாரங்கள், சமையல் பாத்திரங்கள், தண்ணீர் பரல் இன்னும் பல. வெள்ளை மாளிகை, பெரிய அரசடி, சங்கத்தானை. (41147)

### மணப்பெண் தேவை

வயது 46, சவூதியிலிருந்து வந்துள்ள களஸ்திர தோஷ ஜாதகமுள்ள பிரமச்சாரிக்கு குற்றம், குறைபாடுள்ள அல்லது மறுமணத்துக்குரிய மணப்பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பொருந்தினால் மட்டும் மணமகன் தொடர்பு கொள்வார். 17-4-96க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். இல: 544 C/o உதயன், சரசாலை. (41515)

### மணமகள் தேவை

உயர் இந்து குலத்தைச் சேர்ந்த 45 வயதுடைய இளைப்பாறிய அரசாங்க எழுதுவினைஞருக்கு மணமகள் தேவை. செவ்வாய் தோசம் இல்லை. பூசம் நட்சத்திரம். முதற் கடிதத்தில் முழு விவரமும் தெரிவித்தால் நன்று. முகவரி: கா. ஹரிசுந்தரா, மே/பா S. பத்மகாந்தன் (ஆசிரியர்), வள்ளி அரேமியம், கச்சாய் வீதி, கொடிகாமம். [41368]

## துருப்பிடிக்கும் நிலையில் ஜெனரேட்டர்

வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்ட ஜெனரேட்டர் பாவிக்கப்படாது இருந்து வருகிறது. நீண்ட நாள்களாக இந்த ஜெனரேட்டர் விடப்பட்டிருப்பதால் அது போதிய பராமரிப்பு இன்றி துருப்பிடிக்கும் ஆபத்து இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

---

## அமைதிக்கான பிரார்த்தனை இரவு

இடம்:- பண்டாரிதறைப் பிள்ளையார் ஆலயம் அல்லாரை வடக்கு, மீசாலை.

காலம்:- இன்று 15 - 04 - 96 திங்கள் இரவு மாலை 6 மணி தொடக்கம் மறுநாள் காலை 6 மணி வரை

திருமுறை தெய்வீகப்பாக்கள், தொடர் பஜனை

வழங்குவோர்:- அன்னைதாசன் குழுவினர்.

இத் தெய்வீக சேவையில் ஈடுபட விரும்பும் பஜனைக் குழுவினர்கள் அன்போடு அழைக்கப்படுகிறார்கள். அனைவரும் கூடிப்பாடி ஐங்கரன் அருளால் நாட்டில் விரைவில் அமைதி பெறுவோம்.

வருக — பணிக — பாடுக!

பரிபாலன சபையினர்

(45128)

---

## விற்பனைக்கு

நான்கு குளிர்சாதனப் பெட்டிகளும் [DEEP FREEZER], 41 H. P. லிஸ்டர் எஞ்சினும், 20 KVA டைனமோவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

**லிங்கம் கூல் பார்,**

நகுலன் வீதி,
மீசாலை.

(41376)

---

## கண்ணீர் அஞ்சலி

''ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் மீள்வரோ''

எமது கழக அங்கத்தவர்களான சந்திரசிறி, நிர்மலா, மரீன் ஆகியோரின் தாயாரும், கழக அபிமானியுமான

### திருமதி ஞா. இரத்தினம்மா
(பிரகாசியம்மா)

அவர்கள் மரணமானதை இட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/ சுண்டிக்குளி
பாரதி இளைஞர் அறிவியற் கழகம்,
யாழ்ப்பாணம்.

(41531)

---

## முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாணக்கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஓர் அறிவித்தல்

கிளிநொச்சி வட்டாரத்தில் இப்பாடசாலைகள் இணைந்து ஆரம்பிக்க இருப்பதால் இது சம்பந்தமான ஓர் கலந்துரையாடல் வருகிற செவ்வாய்க்கிழமை 16 - 04 - 96 கிளிநொச்சி கிறீஸ்து அரசர் ஆலயத்தில் காலை 9-00 மணிக்கு நடைபெறும். அத்தருணம் யாவரும் சமுகம் தரும்படி உங்களை அழைக்கின்றோம்.

G. இராஜநாயகம்,
C.V. செல்லையா.
(அதிபர்கள்)

(40499)

---

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சுகிர்தம்மா சிவரத்தினம்
(திரவியம்)

எமது சங்க கௌரவ பொருளாளர் திரு. ஏ. சீ. விஜயராயசிங்கம் அவர்களின் மரணமடைந்த தாயாரது, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு சங்கத்தின் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட
அரச ஓய்வூதியர் சங்கத்தினர்.

யாழ். மாவட்ட
அரச ஓய்வூதியர் சங்கம்,
484, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(41529)

---

மேலைப்புலோலி

## சதாவதானி கதிரைவேற்பிள்ளை

அவர்களின்

## 89 வது ஆண்டு நினைவு விழா

காலம்: இன்று (15—04—96) திங்கள் மாலை 6.00 மணி

இடம்: சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றல்

தலைவர்: திரு. க. தங்கராஜா (நிலையத்தலைவர்)

முதன்மை விருந்தினர்

திரு. கே. கமலசேகரம் அவர்கள்
(முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை)

★ குருபூசைத்தின பரிசு பெற்ற பேச்சுக்கள்,
★ சிறப்புச் சொற்பொழிவுகள்
★ பட்டி மண்டபம்
★ கலை நிகழ்ச்சிகள்

பரிசில் வழங்கல் என்பன இடம்பெறும்.

அனைவரும் அன்புடன் வருக

சி. ஜெயச்சந்திரன்
செயலாளர்

விழா சிறப்புற வாழ்த்துவோர்

**மயிலன் வெதுப்பகம்**

வியாபாரி மூலை,
பருத்தித்துறை. (40437)

---

## ST. JOHNS COLLEGE & CHUNDIKULI 'GIRLS' COLLEGE

JAFFNA

மேற்படி இரு பாடசாலைகளும் 17—04—96 காலை 8-45 மணிக்கு பின்வரும் இடங்களில் ஆரம்பமாகும்.

| கிளிநொச்சி | பருத்தித்துறை |
|---|---|
| Y. M. C. A. கட்டடம் | மொடேன் எடிகேசன் சென்ரர், சயன்ஸ் சென்ரர் தம்பசிட்டி வீதி. (வட இந்து மகளிர் கல்லூரி அருகாமை) |

மீசாலை

சயன்ஸ் சென்ரர்
(மணியம் மாஸ்ரர்)

பரியோவான் கல்லூரியில் 1996 ஆம் ஆண்டுக்கு ஆண்டு 1, ஆண்டு 6 வகுப்புகளுக்கு புதிய அனுமதி பெற்றவர்கள் கீழ்வரும் முகவரியில் பிற்பகல் 4 - 00 மணிக்கு 17 - 04 - 96 அன்று அதிபரை சந்திக்கவும்.

சி. தனபாலன்,
அதிபர்
பரியோவான் கல்லூரி.

அணிஞ்சிலடி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. (41530)

---

## தமிழ் இனத்தின்துன்பதுயரங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்தல்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெஞ்சை உருக்கும் சம்பவங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்த வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி முன்வந்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இம்மண்ணின் அவலங்களை, துயர நிகழ்வுகளை நீங்கள் கட்டுரைகளாக எழுதுவதன் மூலம் எமது மண்ணின் துயர் உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்துவதுடன் ஐ. நா. சபைக்கும், மற்றும் மனித உரிமை அமைப்புக்களுக்கும் எங்கள் நீதியைத் தெரியப்படுத்த இது ஓர் சந்தர்ப்பமாகும்.

உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

| வெரித்தாஸ் வாசகர் வட்டம், | வெரித்தாஸ் வாசகர் வட்டம் |
|---|---|
| இல. 542, C/o உதயன் பணிமனை, சரசாலை, சாவகச்சேரி. | விளம்பர இல. 2, C/o உதயன் கிளிநொச்சி கிளை நிலையம், Y. M. C. A. கட்டடம், கிளிநொச்சி. |

(சி/4184)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மறுபரிசீலனை செய்யலாமே!

கொழும்புத் துறைமுகம் ஸ்ரீலங்கா அரச படைகளின் மிக இறுக்கமான கடும் பாதுகாப்பு வலயங்களில் ஒன்று. இந்தத்துறைமுகம் விடுதலைப் புலிகளின் தாக்குதல் இலக்குகளில் ஒன்று எனவும் அரசு இனங்கண்டிருந்தது.

அவ்வாறிருந்தும், விடுதலைப் புலிகள் அதற்குள் ஊடுருவி, மூன்று கடற்படைக் கப்பல்களையும் மூன்று சரக்குக் கப்பல்களையும் தாக்கி அழித்துள்ளார்கள்.

அரசாங்கப் படைகள் எந்த வகை நவீன ஆயுதங்களையும் பிற புதிய வசதிகளையும் தம்வசமாக்கிக் கொண்டாலும் சரி, கண்ணுக்குள் எண்ணெய் விட்டது போல் எவ்விதமாகப் பாதுகாப்பைப் பலப்படுத்தினாலும் சரி —

அவற்றின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு தாம் நினைத்த இலக்கை புலிகள் தாக்கியே தீருவார்கள் —

என்பதனைக் கொழும்புத் துறைமுகத் தாக்குதல் நிரூபித்திருக்கிறது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்காவும் இதனை ஏற்றுள்ளார்.

விடுதலைப் புலிகள் ஓர் இலக்கைத் தேர்ந்து எடுத்தால், எந்த இடர்களுக்கு மத்தியிலும் அந்த இலக்கை அடைந்து விடுவர் — தாக்கியே தீருவர் — என்று அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளை வெல்லலாம் என்றும், அவர்களை ஒழித்துவிடலாம் என்றும் சிங்கள மக்களை அரசாங்கம் ஏமாற்றிவரும் பொய்மையை சரத் முனசிங்கா தமது கூற்றின் மூலம் அம்லப்படுத்தி இருக்கிறார்.

இதனை அவரின் உயர் அதிகாரிகளும், அரசின் உயர் தலைவர்களும் சீரணிப்பது எப்போது?

இராணுவ பலத்தில் மேலோங்கிய நிலையில் நின்று அரசியல் தீர்வை தமிழர் மீது திணிக்க நினைப்பதும் —

போரின் ஊடாக சமாதானம் என்ற வக்கிரத் தனத்தால், வஞ்சனைச் செயலால், கொடுமையால் உலகத்தை ஏமாற்ற நினைப்பதும்—

அடையக் கூடியவை அல்ல என்பதனை இந்தக் சட்டத்திலாவது சந்திரிகாவும், அனுருத்தவும், ஏனைய அரசியல் தலைவர்களும் உணர்ந்து கொள்வார்களா?

விடுதலைப்புலிகளை ஒடுக்கிவிட முடியாது என்ற நிலையில் போரைநிறுத்தவேண்டிய கட்டாயம் அரசுக்கு உருவாகிறது. போர் கொழும்பிலிருந்து தெற்கின் ஏனைய பகுதிகளுக்கும் பரவாமல் தடுப்பதற்கு அரசுக்கு இப்போது கிடைத்துள்ள சந்தர்ப்பம் இது.

தோல்வியை ஒப்புக் கொள்ளக்கூடாது என்ற கௌரவப் பிரச்சினையை அரசாங்கம் தூக்கிப் பிடித்தால், போர் ஒரு பொழுதும் ஓயாது; முடிவுறாது.

இந்தச் சந்தர்ப்பத்திலாவது அரசு தனது முடிவை மறுபரிசீலனை செய்வது நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லது. இல்லையேல் பஸ்ஸைத் தவறவிட்டுத் தவிக்கும் பயணியின் பரிதாப நிலைக்கு அரசு தள்ளப்படும்.

---

### சிறிமாவின் குடியியல் உரிமை விவகாரம்:

# நாடாளுமன்றத் தீர்மானத்தை ஆட்சேபித்து ஐ.தே.கட்சி வழக்கு?

கொழும்பு, ஏப். 15

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையை நீக்கி, அவரை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்ற வகை செய்யும் விதத்தில் 1980 ஆம் ஆண்டில் ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் — நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை—

ரத்துச் செய்யும் முறையில் கடந்த வாரம் தற்போதைய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவிருக்கின்றது.

இத்தீர்மானத்தின் சட்ட வலு குறித்து ஐ. தே. க. வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று, சிறிமாவின் நடவடிக்கை குறித்து விசாரணை நடத்தி, அவரைக் குற்றவாளியாகக் கண்ட பின்னர் செய்த சிபார்சின் அடிப்படையிலேயே சிறிமாவின் குடியுரிமையைப் பறிக்கும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பது தெரிந்ததே.

அந்தத் தீர்மானத்தை ரத்துச் செய்யும் மற்றொரு பிரேரணையை நாடாளுமன்றம் நிறைவேற்றுவதற்கு அனுமதித்தால்—

ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று விசாரணை நடத்தி காணும் முடிவை மாற்றியமைக்க முடியும் என்பதற்கு அது ஒரு முன்னுதாரணமாகி விடும் என்று சட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (உ)

## தென்னைக்கு தண்டுக் கசிவு

சாவகச்சேரி, ஏப். 15

தென்மராட்சியின்பல பகுதிகளிலும் தற்போது தென்னை மரங்களில் ''தண்டுக்கசிவு'' எனும் நோய் பரவி வருகின்றது. தென்னைகளில் இருந்து கபில நிறமான பிசின் வடிய ஆரம்பித்தால், தென்னைச் செய்கையாளர்கள் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

'போடோ கலவை' என்னும் மருந்தை பெற்று பயன் பெறலாம். இந்நோய்த் தாக்கத்திலிருந்து தென்னைகளைக் காப்பாற்றலாம் என்று தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரன் தெரிவித்தார்.

இதுதொடர்பான இலவச ஆலோசனைகளை மீசாலையில் இயங்கும் சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் புதன்கிழமை தோறும்வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (அ-8)

## கமக்காரர் அறிமுக அட்டை விநியோகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கமக்காரர் அறிமுக அட்டை, தற்போது மாவட்ட ரீதியாக சகல விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை கமக்காரர் அறிமுக அட்டைக்கென விண்ணப்பிக்காத சகல விவசாயிகளும் இன்று 15 ஆம் திகதி வரைக்கும் அவ்வப் பகுதி கிராமிய உற்பத்திக் குழுவினருடனோ அல்லது அவ்வப்பகுதி வட்டப்பதிவாளர்களுடனோ தொடர்பு கொண்டு தமக்குரிய விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது. (இ)

## பீரிஸைக் கொல்ல வந்த புலிகள் பிரமுகர் கைதாம்

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸைக் கொல்லும் திட்டத்துடன் கொழும்பு வந்த விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவரை கைது செய்துள்ளதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மற்றொரு பெண் தற்கொலைப்படையாளி ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. (உ-3-6)

## நெல்லின் கொள்வனவு விலை அதிகரிப்பு

வன்னி, முல்லைத்தீவு, மன்னார் பிரதேச விவசாயிகளின் நலன் கருதி நெல்லின் கொள்வனவு விலை இன்று திங்கட்கிழமையில் இருந்து மூடைக்கு நூறு ரூபாவினால் அதிகரிக்கப்படுவதாக வன்னி நெல் வாணிபம் அறிவித்துள்ளது.

### வடக்கு - கிழக்குக்கு

## 'ரி-56' இயக்கத் தெரியாத பொலீஸாரும் இடமாற்றம்

### அதனால் ஓய்வுபெற அவர்கள் முயற்சி

கொழும்பு, ஏப். 15

திடீர் மாற்றங்கள் மற்றும் உரிய விதத்தில் கவனிக்கப்படாமை காரணமாக அதிருப்தியுற்ற பொலீஸ் திணைக்களத்தைச் சேர்ந்த பொலீசாரும், அதிகாரிகளும் சேவையிலிருந்து ஓய்வு பெற விண்ணப்பித்துள்ளதாக 'திவயின' சிங்கள நாளிதழ் தெரிவிக்கிறது.

நோய்களினால் பாதிப்படைந்துள்ளவர்களையும் போதிய ஆயுதப் பயிற்சிகள் பெறாதோரையும் கூட வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கைப் பிரதேசங்களுக்கு பொலீஸ் திணைக்களம் மாற்றியுள்ளது. இவர்களில் பலருக்கு ரி-56 ரக துப்பாக்கியை எவ்வாறு இயக்குவது என்றே தெரியாதாம்.

தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்களில் பணிபுரியும் பொலீஸ்அதிகாரிகள் கூட வடக்கு, கிழக்குப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டுள்ளனராம்.

குற்றத்தடுப்பு,வீதிப்போக்குவரத்து, புலனாய்வுத்துறை ஆகிய பிரிவுகளில் பணியாற்றி பொலீஸ் திணைக்களத்திற்கு கௌரவத்தைச் சம்பாதித்துக் கொடுத்த பொலீஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட திடீர் இடமாற்ற உத்தரவுகளால் அவர்கள் குழப்பம் அடைந்துள்ளனராம்.

இக்காரணங்களால் சாதாரண பொலீஸ்காரர்களிலிருந்து உயரதிகாரிகள் வரை பலர் ஓய்வுபெறுவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர் என்று 'திவயின' மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

# புலனாய்வுப் பிரிவுகளை அரசு மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை

ஸ்ரீலங்கா அரசின் புலனாய்வுப் பிரிவுகள் மிக விரைவில் விரிவுபடுத்தப்பட்டு மறுசீரமைக்கப்படவுள்ளதாக உயர் மட்டப் பொலீஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ''லங்காதீப'' சிங்கள இதழ் தெரிவித்துள்ளது.

இந்த மறுசீரமைப்புக் காரணமாக தேசிய புலனாய்வுப் பிரிவு, இராணுவ உளவுத் துறை மற்றும் அரசின் முக்கிய புலனாய்வுப் பிரிவுகளில் தற்போது பணிபுரியும் முக்கியஸ்தர்கள் பலர் விரைவில் மாற்றப்படவுள்ளனர் எனவும்—

அவர்களுக்குப் பதிலாக பல புதிய முகங்கள் நியமிக்கப்படலாம் எனவும் நம்பப்படுகிறது.

வடக்குக் கிழக்குப் பகுதியில் இதுவரை உளவுப் பணியில் ஈடுபட்டிருந்த பல மூத்த அதிகாரிகளின் பெயர்கள் மறுசீரமைப்பின் போது உயர் பதவிக்கு நியமிக்கப்படும் புலனாய்வுத்துறை அதிகாரிகளின் பட்டியலில் அடங்கியுள்ளனவாம்.

இதற்கிடையில் புலனாய்வுத்துறையை தொழில் நுட்ப ரீதியில் முன்னேற்றுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசின் புலனாய்வுத் துறைகளில் உள்ள குறைபாடுகள் அடங்கிய அறிக்கை ஒன்று அண்மையில் தயாரிக்கப்பட்டு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையிடம் கையளிக்கப்பட்டது. இந்த அறிக்கையின் அடிப்படையிலேயே அப்பிரிவு மீளமைக்கப்பட்டு வருவதாக ''லங்காதீப'' தெரிவிக்கிறது.

## இன்று மேலை புலோலியில் சதாவதானி நினைவுவிழா

வடமராட்சி, ஏப். 15

சதாவதானி நா. கதிரவேற்பிள்ளையின் 89 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று திங்கட்கிழமை மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா ''ஈழத்து இலக்கிய வரலாற்றில் மேலைப் புலோலி நா. கதிரவேற்பிள்ளை'' என்ற தலைப்பிலும்—

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவ. மகாலிங்கம் ''நாவலர் பாரம்பரியமும் சதாவதானியும்'' என்ற தலைப்பிலும்—

ஆசிரியை செல்வி தேவகி விக்கினராஜா ''பெண்ணுரிமை'' என்ற தலைப்பிலும்—

சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

கதிரவேற்பிள்ளை குருபூசையையொட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்படும். (உ-173)

## புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கினார் வாசுதேவா

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை உடன் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி லங்கா சமசமாஜக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார ஜனநாயக மக்கள் முன்னணி என்ற புதிய அமைப்பு ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது வாசுதேவ நாணயக்காராவும் மற்றும் சில லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினர்களும் வாக்களிப்பில் கலந்து கொள்ளாதது தெரிந்ததே. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு சங்கங்கள் மிளகாய் கொள்வனவு

## கிலோ நூறு ரூபா வீதம்

சாவகச்சேரி, ஏப். 15

செத்தல் மிளகாயின் விலை சந்தையில் வீழ்ச்சி அடைந்துள்ளதை அடுத்து ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கமும் தமது பகுதியிலுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து, அவர்களின் நலன் கருதி செத்தல் மிளகாயை கிலோ 100 ரூபா வீதம் கொள்வனவு செய்யும்.

கடந்த 11 ஆம் திகதி நடந்த யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைக் கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை மேற்படி சங்கங்கள் தமது தேவைக்கு அதிகமாகக் கொள்வனவு செய்யும் செத்தல் மிளகாயை விவசாய அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கொள்வனவு செய்யும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-7)

### இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வர் கூட இத்தேர்தலில் போட்டியிடவில்லை.

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸுக்கு ஆதரவு குறைந்து கொண்டு போவதையே மதிப்பீடுகள் காட்டுகின்றன.

பாரதீய ஜனதாக் கட்சியும், தேசிய இடதுசாரி முன்னணியும் இந்த தேர்தலில் வெற்றியிட்டினாலும் அவற்றினாற் கூட உறுதியான ஒரு கூட்டரசாங்கத்தை அமைக்க முடியாதிருக்கும் — இவ்வாறு செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

பொதுத் தேர்தல் வாக்களிப்பு 27 ஆம் திகதி ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது. (உ-3)

### 9 கடற்கரும்புலிகள்...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

பியன்பற்று – மாமுனை ஊடாக நாகர்கோவிலை ஊர்தி சென்றடையும். அங்கிருந்து நாகர்கோவில்-பருத்தித்துறை வீதி ஊடாக கிராமக் கோட்டுச் சந்தியை சென்றடைந்து, அன்றிரவு ஊர்தி அங்கு தரித்து நிற்கும்.

நாளை மறுதினம்

நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு கிராமக்கோட்டுச் சந்தியில் நடைபெறும் வீரவணக்கக் கூட்டத்தைத் தொடர்ந்து, ஊர்தி பருத்தித்துறை — கடற்கரை வீதி ஊடாக வல்வெட்டித் துறையையும், வல்வெட்டித் துறை — உடுப்பிட்டி வீதி ஊடாக உடுப்பிட்டிச் சந்தியையும், உடுப்பிட்டி—வதிரி ஊடாக நெல்லியடிச் சந்தியையும் பிற்பகல் 3 மணியளவில் சென்றடையும்.

இதேசமயம் கரும்புலி மாவீரர்களான லெப்டினன்ட் கேணல் ரதீஸ்,மேஜர் ரவாஸ், மேஜர் பரன்,மேஜர் ஜனார்த்தனன்,கப்டன் விக்கி, கப்டன் மதனிஆகியமாவீரர்களுடைய திருவுருவப்படங்கள் அவர்களது இல்லங்களில் இருந்து இராணுவ மரியாதையுடன் எடுத்துவரப்பட்டு நெல்லியடிச் சந்தியில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதி வீரவணக்கக் கூட்டம் அங்கு இடம்பெறும்.

தொடர்ந்து திருவுருவப் படம் தாங்கிய அலங்கரிக்கப்பட்ட ஊர்தியும், கப்பல் வடிவிலான ஊர்தியும் நெல்லியடி - யாழ். வீதி ஊடாக குஞ்சர் கடைச் சந்தியை சென்றடைந்து, அங்கிருந்து நவிண்டில் வீதி ஊடாக வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தை சென்றடையும். அங்கு பூரண இராணுவ மரியாதைகளுடன் ஆறு மாவீரர்களுக்கும் நினைவு நடுகல் நாட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## குண்டுச் சத்தம்

கரணவாய், ஏப். 15

இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வலிகாமம் பகுதியில் அச்சுவேலி, ஆவரங்கால் பிரதேசங்களில் இருந்து நேற்று பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்டன.

இதேசமயம் வல்லை, கப்பூது வெளிகளுக்கு மேலாக ஹெலி ஒன்று பல தடவைகள் வட்டமிட்டுச் சென்றது. (உ-80)

### படையினர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குதலை தீவிரப்படுத்தத் தொடங்கினர்.

புலிகளின் அதிரடிகளில் கடந்த இரு மாத காலத்துக்குள் இருநூறுக்கும் அதிக சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே.

பெரும்பாலும் படையினரின் ரோந்து அணிகளே புலிகளின் இலக்காகி வந்துள்ளன.

இத் தாக்குதல்களினால் அதிகளவு சிப்பாய்களை அரசுப்படைகள் இழக்கும் அதே சமயம் அச்சிப்பாய்கள் வசம் இருக்கும் ஆயுதங்களையும் புலிகள் அள்ளிச் செல்லும் நிலையும் ஏற்பட்டது.

இதனை அடுத்தே ரோந்து நடவடிக்கையை — அத்தியாவசிய தேவை இருந்தால் ஒழிய —மேற்கொள்வதில்லை என்ற முடிவுக்கு அரசுப்படைகள் தள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. (உ-3)

### மிக மோசமான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லங்களான உத்தரப் பிரதேசம், பீகார் போன்றவற்றில் காங்கிரஸ் ஏறத்தாழ மரணத் தறுவாயில் உள்ளது.

ஹாவாலா ஊழலுக்கு பின் இருந்த மரியாதையும் காங்கிரஸுக்கு போய்விட மிச்சமிருந்த கொஞ்ச நஞ்ச மரியாதையையும் ஜெயலலிதாவின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு காங்கிரஸ் தலைவர் நரசிம்மராவ் ஏற்படுத்திய கூட்டணியால் இழக்கப்பட்டுவிட்டது. —இவ்வாறு வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது. (உ-8)

2 ஆம் பக்கத்தில் மரண அறிவித்தல்கள்

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 15-04-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் புறப்பட்டனர்.

சுலோஜன் நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த கடற்கரும் புலிகளான மேஜர் பரன், மேஜர் ஜனார்த்தனன், கப்டன் சுபாஸ், கப்டன் விக்கி, அங்கையற்கண்ணி நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த மேஜர் பொய்யாமொழி, கப்டன் மதனி ஆகியோர் இப்பணியில் இருந்தனர். நள்ளிரவு 12 மணிக்கு துறைமுக வாயிலை இவ்வணி அடைந்தது.

நேரக் கணிப்பு குண்டுகளை பொருத்தினர்

துறைமுகத்தில் முதலில் எரிபொருள் கப்பலும், அதிலிருந்து 700 மீற்றர் தூரத்தில் கொள்கலன் மாற்றுக் கப்பல்களும் நின்றிருந்தன.

இவற்றிற்கு நேரக் கணிப்புக் குண்டுகளை பொருத்திய பொய்யாமொழி, ஜனார்த்தனன், விக்கி ஆகியோர் துறைமுகத்தைவிட்டு வெளியேறினர்.

இரண்டாயிரத்து 700 மீற்றர் தொலைவிலிருந்த கடற்படையின் — முக்கியமான— அதிபலம் வாய்ந்த ஆறு கப்பல்கள் அணியை நோக்கி சென்ற பரன், சுபாஸ், மதினி ஆகியோர் மூன்று கப்பல்களுக்கு தம்முடன் கொண்டு சென்ற குண்டுகளை அதிகாலை 1.30 மணிக்கு வெடிக்கச் செய்தனர்.

ஆறு கப்பல்களும் தகர்க்கப்பட்டன.

நேரக் கணிப்புக் குண்டுகளை பொருத்திவிட்டு துறைமுகத்தைவிட்டு வெளியேறிய பொய்யாமொழி, ஜனார்த்தனன், விக்கி ஆகியோர் தயார் நிலையில் நின்றிருந்த வெடிமருந்து ஏற்றிய அதிவேக படகில் ஏறிக்கொண்டனர்.

தாக்குதல் அணித் தளபதி லெப்டினன்ட் கேணல் ரதீஸ், உப தளபதி மேஜர் ரதன், ஓட்டி மேஜர் ரவாஸ் ஆகியோர் இப்படகில் நின்றிருந்தனர்.

இப்படகு அதிகாலை 5.30 மணியளவில் துறைமுகத்துள் நுழைந்தது. படகிலிருந்த ஆர். பி. ஜிக்கள், ஏ. கே. எல். எம். ஜிக்கள் மூலம் இக் கரும்புலிகள் தீவிர தாக்குதலை மேற்கொண்டனர்.

65 க்கும் மேற்பட்ட குண்டுகள் வெடிப்பு

இக் கடற்கரும்புலிகள் துறைமுகக் கட்டடங்கள் மீதும் கப்பல்கள் மீதும் தீரமிகு தாக்குதலை நடத்தினர். எதிரியின் கோட்டைக்குள்ளேயே தரையாலும் உட்புகுந்து கடலிலிருந்தும் வீரச்சமர் புரிந்தனர்.

அறுபத்தியைந்துக்கும் மேற்பட்ட குண்டுகளை வெடிக்க வைத்து வீரச்சமர் புரிந்த அக்கரும்புலிகள் இறுதிவரை தாக்குதலை நடத்தி படகை வெடிக்க வைத்து வீரகாவியமடைந்தனர்.

அதி கூடிய பாதுகாப்புடைய அத்துறைமுகத்துள் கடற்கரும்புலிகள் வெற்றிகரமாகத் திட்டமிட்டபடி தமது பணிகளை நிறைவேற்றினர்.

இச்செய்தியை ஸ்ரீலங்கா அரசு இருட்டடிப்புச் செய்துள்ளது.

இவ்வாறு "புலிகளின் குரல்" மேலும் தெரிவித்தது. (உ-7)

# எல்லையை பாதுகாக்க தனித்திட்டம்!

சாவகச்சேரி, ஏப். 15

சிங்கள தேசத்தின் எல்லையோரங்களைப் பாதுகாக்க புதிய திட்டம் ஒன்று அவசர அவசரமாக வகுக்கப்படுவதாக ஸ்ரீலங்கா அரசை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எல்லையோரக் கிராமங்களில் நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலையால் பெருமளவான சிங்களக் குடியேற்றவாசிகள் அப்பகுதியிலிருந்து தென்னிலங்கையின் பல்வேறு இடங்களுக்கும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதனால் இக்குடியேற்றங்களைத் தொடர்ந்து தக்க வைப்பதில் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை —

எல்லையோரக் கிராமங்களின் பாதுகாப்புக்கென விசேட பாதுகாப்பு நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளதாக வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இதற்கிடையே —

ஊர்காவல் படையினருக்கு தன்னியக்க துப்பாக்கிகள் வழங்கப்படுகின்றன.

ஊவா மாகாணத்தின் வடகிழக்குப் பிரதேசமான மொனறாகலப்பகுதியில் 150 பேருக்கு அண்மையில் தன்னியக்க துப்பாக்கிகள் வழங்கப்பட்டன. (உ-7)

# உணவு மற்றும் ஆயுத விநியோக வசதிகளை அழிப்பதே புலிகள் இலக்கு!

மணிலா, ஏப். 15

தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்துள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு உணவு மற்றும் ஆயுதங்கள் எடுத்துச் செல்லும் போக்குவரத்து வசதிகளை அழிப்பதுதான் தமது அடுத்த இலக்கு என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளதாக வெரித்தாஸ் வானொலி நேற்று குறிப்பிட்டது.

வெளிநாடுகளில் இருந்து ஸ்ரீலங்காவுக்கு வரும் ஆயுதத் தளபாடங்களையும் குறி வைப்போம் என லண்டனில் இருந்து விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பேச்சாளர் லோறன்ஸ் திலகர் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

சீனா, இஸ்ரேல் நாடுகளில் இருந்து தான் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு இப்போது அதிகமான ஆயுதங்கள் வருவதாக தெரிகிறது.— என்று வெரித்தாஸ் மேலும் குறிப்பிட்டது. (உ-8)

# வங்கி, ஆசிரியர் நியமனங்களில் ஊழல்!

கொழும்பு, ஏப். 15

வங்கி மற்றும் ஆசிரியர்கள் நியமனங்கள் முற்று முழுதாக அரச நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் பேரில் நடப்பதால் தகுதியுள்ளவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக இளைஞர்கள், யுவதிகள மத்தியில் அமைதியின்மையும், விரக்தியும் நிலவுகின்றன.

பி.பி.ஸி. யின் இளம் செய்தியாளரான ஆனந்த ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''இலங்கையில் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் நிலவும் அமைதியின்மை'' என்னும் தலைப்பில் அவர் பி.பி.ஸி க்கு வழங்கிய கண்ணோட்டத்தில் மேலும் தெரிவித்ததாவது:-

வங்கி நியமனங்களின் போது சிறப்புத் தேர்ச்சி பெற்ற பல்கலைக்கழக பட்டதாரிகள் புறக்கணிக்கப்படுகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்களின் உற்றார், உறவினர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். இதனால் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகள் மத்தியில் விரக்தி ஏற்பட்டுள்ளது.

8 ஆயிரம் ஆசிரியர் நியமனத்திலும் அரசு இதே நடைமுறையையே கடைப்பிடிக்கிறது.

இதன் காரணமாக வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகள் விரக்தியடைந்துள்ளனர். அடுத்து கிளர்ச்சி ஏற்படின் அது உயர்கல்வி பெற்று வேலையற்று இருப்போராலேயே மேற்கொள்ளப்படும் என்றார். (இ-3-6)

**கையொப்பம் இட்டு-உங்கள் உணர்வை வெளிப்படுத்துங்கள்!**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org